மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 99/2023

**2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09-ம் நாள் செவ்வாய் கிழமை** பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW-1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணியன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : வைத்தியலிங்கம் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :அனுக்கூர் குடிக்காடு | வயது | : 61 /2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) எனது சொந்த ஊர் அனுக்கூர் குடிக்காடு. அங்கே எனக்கு சொந்தமாக வீடு உள்ளது. வாதி வெண்ணிலாவுக்கும் அதே ஊர் தான். அவர் தற்போது பெரம்பலூரில் குடியிருந்து வருகிறார். அவரது கணவர் வெளிநாட்டில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.447/5A மற்றும் 447/2. கடந்த 2004 ம் ஆண்டு நாராயணசாமி என்பவரிடம் தாவா சொத்து இரண்டை பெற்றேன். பிரதிவாதி அவரிடம் காண்பிக்கப்படும் 17.06.2004 ம் தேதியிட்ட சான்றிட்ட கிரைய பத்திரம் அவர் எழுதி கொடுத்தன ஒப்புக்கொண்டு (அது **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்னிட்டு 13.04.2005 ம் ஆண்டு தாவா சொத்துக்களை நாராயணசாமி என்பவர் ராமசாமி என்பவருக்கு கிரையம் எழுதி கொடுத்தார் என்றும் அது தன்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றும் சாட்சி ஒப்புக்கொள்கிறார். (அது **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.)

(ii) மேற்படி தாவா சொத்துக்களை அதை தொடர்ந்து கிரையம் பெற்ற ராமசாமி கடந்த 29.03.2010 ம் வருடம் நடேசன் என்பவருக்கு கிரையமாக எழுதிக்கொடுத்தார் என்றும் அது தன்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றும் சாட்சி ஒப்புக்கொள்கிறார். (அது **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அவ்வாறு கிரையம் பெற்ற நடேசன் 16.04.2013 ம் வருடம் எறையூர் கிராமத்தை சேர்ந்த மனோகரன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் பெற்ற மனோகரன் இரண்டு நபர்களிடம் கிரையம் கொடுத்துள்ளார் அதில் ஒரு நபர் மஞ்சுளா என்றால் சரிதான். மற்றொரு நபர் மாரியாயி என்பவருக்கும் அவரது கணவர் கிருஷ்ணமூர்த்திக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி மாரியாரி மற்றும் கிருஷ்ணமூர்த்திக்கு 04.04.2018 அன்று வாதியின் கணவர் ராமலிங்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன அனைத்து ஆவணங்களும் சார்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி

ஆவணங்களில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் கையொப்பம் செய்யவில்லை ஆனால் உடன் இருந்தேன். மேலே சொல்லியுள்ள கிரைய ஆவணங்களில் எந்த ஆவணங்களிலும் கடனுக்காக சொத்தை விற்றதாக வாசகங்கள் தென்படவில்லை என்றால் நம்பிக்கையின் பேரில் கிரையம் கொடுத்தேன். ஆனால் எழுதி வாங்கவில்லை.

(iii) இந்த கிரையங்கள் செய்தபோது கடனுக்காக சொத்தை எழுதிக்கொடுத்தாக வேறு ஏதேனும் ஆவணங்களை எழுதி வாங்கியுள்ளீர்களா என்றால் அவ்வாறு எழுதி வாங்கவில்லை. நீங்கள் கடனுக்காக தான் சொத்தை கடன் கொடுத்தாக சொல்லி சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளீர்களா என்றால் இப்பொழுது தான் எடுத்துள்ளேன். நீங்கள் வழக்கு சொத்து உங்களுக்கு சொந்தமானது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பி.சா.ஆ.2 மற்றும் பி.சா.ஆ.3 ஆவணங்கள் சட்டப்படி உங்களிடம் இருக்க வேண்டிய ஆவணங்கள் இல்லை என்றாலும் அந்த ஆவணத்தில் நீங்கள் தரப்பினர்கள் இல்லை என்றாலும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உங்களுக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் அனைத்தும் கிரையம் பெற்ற நபரிடம் உள்ள ஆவணங்கள் என்றாலும் அதனை முறையற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா வாதியின் கணவர் ராமலிங்கம் பெயரில் உள்ளது. தாவா சொத்து நான் அனுபவம் செய்து வரும் நிலையில் அது சம்மந்தமாக அனுபவ அடங்கல் எதனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வாதி சட்டப்படி கிரையம் பெற்று அனுபவம் செய்து வரும் சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை மனோகரிடமிருந்து கிரையம் பெற்ற மஞ்சுளா என்பவர் தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தை நீங்கள் ஒருபோதும் அனுபவம் செய்ததில்லை என்றாலும் தாவா சொத்தை விற்றுவிற்றதால் அதில் ஒருபோதும் உங்களுக்கு உரிமையில்லை என்றாலும் சரியல்ல.